முருகப்பெருமான் துணை

**மகான் திருமாளிகைத் தேவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.12.2022, புதன்கிழமை

1. தானென்ற செருக்கை மக்களிடை
தகர்த்துமே தன்னலம் கருதாதபடி
ஞான வாழ்வு அருளும் அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள் திங்கள்
குறைவிலா மூவேழுதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 21 ம் நாள் 07.12.2022, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு திருமாளிகைத் தேவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறிகாட்டும் தவசியின்
ஞானமே மனிதனை தெய்வநிலைக்கு
நன்மைபட உயர்த்தும் வகை ஆகும்
4. ஆகவே அனுகியே மக்கள்
ஆற்றல்மிக்க அருளமுது உண்டு
மகாமந்திர தீட்சை தன்னை
மாதவசி அரங்கன் கரங்கள்பட
5. கரங்கள்பட ஏற்று இனிதே
கருணை வேண்டி செபதபம்
வரங்கள் தா என அனுதினமும்
வழிபாட்டை தொடர்ந்து செய்ய
6. செய்யவே வினைகள் விலகி
செயல்பாடுகள் சேவையாகி
அய்யமிலா தெளிவு திடமோடு
அரங்கன் திருவடி விட்டு அகலா
7. அகலா பெருவாழ்வாக மாறி
ஆனந்தம் அமைதி அதீத பக்குவம்
மகத்துவமான ஆற்றலாக மாறி
மண்ணுலகம் தனையே மாற்றும்
8. மாற்றும் மகாசக்திகள் ஆகவே
மகான் அரங்கனால் தேறுவர்
ஆற்றல்மிக்க இந்தவித சக்தி
அரங்கனால் அவதாரமகிமையாக
9. ஆகவே உலகினில் நடந்துவர
அகிலத்தார் அறிந்துணர்ந்து வர
செகத்தையே ஞான பலமிக்க
சித்திமிகு ஞானசித்தர் காலமாக

10. காலமாக மாற்றி உலகினில்
கந்தவேலன் வழிபாட்டினை
நாளும் உலகோர் செய்துமே
ஞானத் தலைமையை படைப்பர்

11. படைப்பர் பண்பாளர் நிறைந்த
பாடிடுவேன் ஞான ஆட்சியை
தடையின்றி உலகிற்கு கொடுப்பர்
தாமுரைத்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–